IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP. No. 114/2012

Deposition of RW 4 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **06.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஆர்.பக்தவத்சலன் | **Caste** | : | |
| **S/o.** | : | டி.ராமகிருஷ்ணன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 4 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.4 | – | 3 ஆம் எதிர்மனுதாரர் சுப்ரியா தத்தா என்பவர் எங்கள் ஓரியண்டல் கம்பெனியில் அவரது TN 39 AH 6093 என்ற பதிவு எண் கொண்ட HERO HONDA SPLENDER இரு சக்கர வாகனத்தை காப்பீடு செய்து 4 ஆம் எதிர்மனுதாரரிடம் பெற்ற பாலிசி | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.5 | | 3 ஆம் எதிர்மனுதாரர் சுப்ரியா தத்தா என்பவருக்கு கடந்த 08.10.2024 இல் 4 ஆம் எதிர்மனுதாரர் சார்பில் அனுப்பப்பட்ட கடிதம் | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.6 | | 4 ஆம் எதிர்மனுதாரர் சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்தை 3 ஆம் எதிர்மனுதாரர் சுப்ரியா தத்தா 14.10.2024 யில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் 2016 ம் வருடம் மார்ச் மாதத்தில் இருந்து 4 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில்

பணிபுரிந்து வருகிறேன். மனுவில் குறிப்பிட்டுள்ள விபத்து 14.09.2011ம் தேதி நடந்தது என்றால் சரிதான். விபத்தை பற்றி நான் விசாரணை செய்யவில்லை என்றும் விபத்து பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது என்றும் கோப்புகளின் அடிப்படையில் தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன சின்னபையன் (எ) வேட்ராயன் விபத்து சமயத்தில் ஹெல்மெட் அணிந்திருந்தாரா அவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் மேற்படி விவரம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. விபத்து நடந்த 14.09.2011ம் தேதியில் TN 39 AH 6093 என்ற HERO HONDA வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் 7 ஆம் பத்தியில் எ.ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திருமதி.சங்கீதா அவரது சாட்சியத்தில் எ.ம.சா.ஆ.3 யின்படி 1 ஆம் மனுதாரரின் கணவர் சின்னபையன் (எ) வேட்ராயன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சாட்சியமளித்துள்ளார் என்று நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் பின்னால் அமர்ந்து சென்ற இறந்துபோன சிவாஜி (எ) கணேசன் என்பவர் எங்களை பொறுத்தவரை மூன்றாம் நபர் தான் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.4 ஆவணத்தை விபத்து சமயத்தில் நான் கேட்டு பெறவில்லை என்றும் கடந்த 08.10.2024ம் தேதியில்தான் பெற்றுள்ளேன் என்றால் விபத்து சமயத்தில் பெற்ற ஆவணம் கோப்பில் இல்லை அதனால் 08.10.2024ந்தேதி பெற்றுள்ளேன். இந்த வழக்கை பொறுத்தவரை 2 ஆம் எதிர்மனுதாரரும், 4 ஆம் எதிர்மனுதாரரும் கூட்டாகவும், தனிதனியாகவும் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 39 AH 6093 என்ற HERO HONDA வாகனத்தை ஓட்டிய சின்னபையன் (எ) வேட்ராயன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை முதலில் இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரின் அஜாக்ரதையால் விபத்து ஏற்பட்டதாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னர் குற்றப்பத்திரிக்கை 1 ஆம் எதிர்மனுதார்ர்

வாகன ஓட்டுனர் பாரதி என்பவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் மேட்டூர் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 43/2012 என்ற வழக்கானது 16.04.2019 ந்தேதி தீர்ப்பளிக்கப்பட்டு அந்த தீர்ப்பின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் பத்தி 6 யில் "இறந்துபோன சின்னப்பையன் என்பவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் TATA ACE வண்டியின்ஓட்டுனரான எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதற்கு அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. அவர் இந்த வழக்கில் குற்றவாளி அல்ல " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு மனுக்களும் மோட்டார் வாகன சட்டம் 166 யின் கீழ் தாக்கல் செய்திருப்பதால் அஜாக்ரதையை நிரூபிக்க வேண்டியது மனுதாரர்களின் கடமை என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கில் பாரதி என்பவர் விடுதலை செய்யப்பட்டிருப்பதால் இருசக்கர வாகனத்தை ஓட்டிய சின்னபையன் (எ) வேட்ராயனின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டிருப்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய அவசியமில்லை என்றும் 2 ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

ஒம்/—ஆர்.பக்தவத்சலன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.